**Kalanjiyam International Journal of Tamil Studies**
களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
Issue DOI: https://doi.org/10.63300/kijts06022026
https://ngmtamil.in

# Religious Condition Revealed by Pallava Period Coins – A Study

**Niththiyanantham Thiruchselvam*,**
*Master of Arts Student, Department of Archaeology, University of Kerala.*
*Corresponding Author EMail: thiruselvamthiru524@gmail.com.

DOI: https://doi.org/10.63300/kijts06022026.03

**Article Info**
Received on 12-July-2026, Revised on 15-July-2026, Accepted on 16-July-2026, Published on 01-Aug-2026

## ABSTRACT

This study analyzes Pallava-period coins (6th to 9th century CE) as crucial historical and numismatic evidence to reconstruct the religious landscape of South India during the transformative "Age of Bhakti." Utilizing both primary and secondary sources—including recovered coins, inscriptions, and historical texts—the research investigates how coin symbols and designs reflect the era's religious shift, notably the rebirth of Hinduism following its post-Sangam decline and the conversion of Mahendravarman I from Jainism. The analysis reveals that while the predominant presence of symbols like the Nandi and Trishula underscores the primacy of Shaivism, the inclusion of Vaishnavite motifs (Shankha and Chakra) alongside indirect traces of Jainism and Buddhism highlights a period of peak growth for various Hindu sects, prevailing religious tolerance, and extensive royal patronage.

***KEYWORDS:*** *Pallava period, Coins, Religious condition, Religious symbols.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

# பல்லவர்கால நாணயங்கள் வெளிப்படுத்தும் சமயநிலை – ஓர் ஆய்வு

***நித்தியானந்தம் திருச்செல்வம்,**
முதுகலைமாணி மாணவன், தொல்லியல்துறை,
கேரளப் பல்கலைக்கழகம்.

**ஆய்வுச்சுருக்கம்**

பல்லவர்காலம் தென்னிந்திய வரலாற்றில் சமயம், கலை மற்றும் அரசியல் வளர்ச்சியின் முக்கியமான காலகட்டமாகக் கருதப்படுகின்றது. கி.பி. 6ஆம் நூற்றாண்டிலிருந்து 9ஆம் நூற்றாண்டு வரை காஞ்சியை தலைநகராகக்கொண்டு ஆட்சி செய்த பல்லவர்கள் தமது ஆட்சிக்காலத்தில் இந்து சமய வளர்ச்சிக்கும் கலாசார முன்னேற்றத்திற்கும் முதன்மையான பங்களிப்புகளை வழங்கினர். முதலாம் மகேந்திரவர்மன் சமணத்திலிருந்து இந்து சமயத்திற்கு மதம் மாறியதைத் தொடர்ந்து அரசியல், பொருளாதாரம், சமயம்,மற்றும் கலைகள்
போன்றவற்றில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இதனால் இக்காலம் “பக்தி நெறிக்காலம்” என சிறப்பிக்கப்படுகின்றது. நாயன்மார்களின் பக்திப் பாடல்கள் போன்ற இலக்கியச்சான்றுகளும், கல்வெட்டுகள், ஆலயங்கள் உட்பட பல தொல்லியல் சான்றுகளும் அக்கால சமயநிலையை வெளிப்படுத்துகின்றன. இச்சான்றுகளில் முக்கியமான இடத்தைப் பெறுவது நாணயங்களாகும். பல்லவர்களால் உருவாக்கப்பட்ட நாணயங்கள் பொருளாதார பரிவர்த்தனைகளுக்கான கருவிகளாக மட்டுமன்றி, அக்கால மக்களின் சமயநம்பிக்கைகள், அரசியல் சின்னங்கள் மற்றும் ஆட்சியாளர்களின் சமய ஆதரவுகளை பிரதிபலிக்கும் வரலாற்று ஆதாரங்களாகவும் விளங்குகின்றன. இவ்வாய்வானது பல்லவர்கால நாணயங்களில் காணப்படும் சின்னங்கள் மற்றும் வடிவமைப்புகளின் அடிப்படையில் அக்கால சமயநிலையை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. குறிப்பாக நந்தி மற்றும் திரிசூலம் போன்ற சைவச் சின்னங்கள் அதிகமாகக் காணப்படுவது சைவ சமயத்தின் முதன்மைத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றது. அதேவேளை சங்கு மற்றும் சக்கரம் போன்ற வைணவச் சின்னங்களும் நாணயங்களில் காணப்படுவது வைணவ சமயத்தின் தாக்கத்தை வெளிப்படுத்துகின்றது. அத்துடன் சமணம் மற்றும் பௌத்தம் போன்ற பிற சமயங்களின் மறைமுக செல்வாக்கும் காணப்பட்டதனை சில சின்னங்களின் வழியாக அறியமுடிகின்றது. ஆய்வின் கருதுகோளாக சங்கமருவிய காலத்தில் வலுவிழந்திருந்த இந்துசமயம் பல்லவர்காலத்தில் மறுபிறப்பைப் பெற்று சைவம், வைணவம் உட்பட பல பிரிவுகளில் உச்ச வளர்ச்சியை பெற்றதனையும், சமணம் போன்ற பிற சமயங்கள் ஆங்காங்கே தொடர்ந்திருந்ததையும் பல்லவர்கால நாணயங்கள்

வெளிப்படுத்திநிற்கின்றன என்பதை முன்வைக்கின்றது. இதன் மூலம் அக்கால சமூகத்தில் சமய சகிப்புத்தன்மை நிலவியிருந்ததையும் உணர முடிகின்றது. ஆய்விற்கான தரவுகளாக முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்படுகின்றன. குறிப்பாக ஆய்வுகளில் கிடைத்த நாணயங்கள், கல்வெட்டுகள் மற்றும் வரலாற்று நூல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அந்தவகையில் பல்லவர்கால நாணயங்கள் தென்னிந்திய சமய வரலாற்றை கட்டமைப்பதில் முக்கிய ஆதாரங்களாக விளங்குவதுடன் பல்லவர்களின் இந்து சமயத்திற்கான பங்களிப்பினை எடுத்துக்காட்டும் முக்கிய சான்றுகளாகவும் விளங்குகின்றன.

**திறவுச்சொற்கள்-** *பல்லவர்காலம், நாணயங்கள், சமயநிலை, சமயச் சின்னங்கள்.*

## அறிமுகம்

பல்லவர்காலம் தென்னிந்திய வரலாற்றில் அரசியல், சமயம், கலை மற்றும் பண்பாட்டு வளர்ச்சியின் முக்கியமான காலகட்டமாகக் கருதப்படுகின்றது. கி.பி. 6ஆம் நூற்றாண்டிலிருந்து 9ஆம் நூற்றாண்டு வரை தொண்டை மண்டலத்தை ஆட்சி செய்த பல்லவர்கள், தமிழக வரலாற்றில் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளனர். இவர்களின் தலைநகரமாக காஞ்சிபுரமும் முக்கியத் துறைமுகமாக மாமல்லபுரமும் விளங்கின. சிம்மவிஷ்ணு, முதலாம் மகேந்திரவர்மன், முதலாம் நரசிம்மவர்மன், இராசசிம்மன், நந்திவர்மன் போன்ற பல்லவ மன்னர்கள் அரசியல் திறமைக்குப் பெயர் பெற்றதுடன், சமயம், கலை, கட்டிடக்கலை மற்றும் கல்வி வளர்ச்சிக்கும் முக்கிய பங்காற்றினர். குறிப்பாக கோயில் கட்டிடக்கலை, சிற்பக்கலை மற்றும் பக்தி இயக்க வளர்ச்சிக்கு அவர்கள் வழங்கிய ஆதரவு குறிப்பிடத்தக்கதாகும். இக்காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்கள் பொருளாதாரப் பயன்பாட்டை மட்டுமன்றி, அக்கால அரசியல் அதிகாரம், சமய நம்பிக்கைகள், சமூக நிலை மற்றும் பண்பாட்டு மரபுகளை வெளிப்படுத்தும் முக்கிய வரலாற்றுச் சான்றுகளாகவும் அமைந்துள்ளன. குறிப்பாக நாணயங்களில் இடம்பெற்றுள்ள நந்தி, சங்கு, சக்கரம், மயில், சூரியன், கோயில், சுவஸ்திகா போன்ற சின்னங்கள் சைவம், வைணவம், முருக வழிபாடு மற்றும் பிறசமய மரபுகளின் செல்வாக்கை எடுத்துக்காட்டுகின்றன. எனவே, பல்லவர்கால நாணயங்கள் அக்கால சமயநிலை மற்றும் பண்பாட்டு வளர்ச்சியை அறிய முக்கிய ஆதாரங்களாகக் கருதப்படுகின்றன.

## ஆய்வு நோக்கங்கள்

இவ்வாய்வின் முக்கிய நோக்கம் பல்லவர்கால நாணயங்களில் இடம்பெற்றுள்ள சின்னங்கள் மற்றும் உருவங்களை ஆய்வு செய்து, அவை வெளிப்படுத்தும் சைவம், வைணவம், முருக வழிபாடு உள்ளிட்ட சமயநிலைகளை விளக்குவதாகும். பல்லவர் மன்னர்களின் சமய ஆதரவு மற்றும் அரசியல்

Copyright © Author(s), DOI: https://doi.org/10.63300/kijts06022026 

சிந்தனைகளை நாணயங்களின் மூலம் ஆராய்வதுடன், அக்கால சமூக, பண்பாட்டு மற்றும் பக்தி இயக்க வளர்ச்சியைப் புரிந்துகொள்வதும் இவ்வாய்வின் நோக்கமாகும். அத்துடன், பல்லவர்கால நாணயங்களை முக்கிய வரலாற்றுச் சான்றுகளாக மதிப்பீடு செய்வதும் இவ்வாய்வின் பிரதான நோக்கங்களுள் ஒன்றாகும்

**ஆய்வுக் கருதுகோள்**

பல்லவர்கால நாணயங்கள் அக்கால சமயநிலை, அரசியல் மற்றும் கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் முக்கிய வரலாற்றுச் சான்றுகளாக விளங்குகின்றன என்ற கருதுகோளை இவ்வாய்வு முன்வைக்கின்றது. குறிப்பாக நாணயங்களில் இடம் பெற்றுள்ள நந்தி, சிவலிங்கம், சங்கு, சக்கரம், மயில், சூரியன், சந்திரன், போதிமரம், சைத்தியம், போன்ற சின்னங்கள் பல்லவர்களின் சமயப்பற்றையும் சமயப்பொறையையும் பிரதிபலிக்கின்றன. பல்லவர்களின் அரச ஆதரவால் சைவமும் வைணவமும் பெரும் வளர்ச்சி பெற்றதோடு, முருகன், விநாயகர், சூரியன், சந்திரன் ஆகிய தெய்வ வழிபாடுகளும் சமூகத்தில் முக்கிய இடம் பெற்றிருந்தன என்பதையும் நாணயங்கள் உறுதிப்படுத்துகின்றன. அதேவேளை சமணம் மற்றும் பௌத்தம் ஆகிய சமயங்களும் முற்றிலும் மறையாமல் சமூகத்தில் தொடர்ச்சியான காணப்பட்டன என அறியமுடிகின்றது. அத்துடன், பல்லவர்கால நாணயங்கள் தமிழகத்தைத் தாண்டி இலங்கை மற்றும் தென்கிழக்காசிய நாடுகளுடனான கலாச்சார மற்றும் வணிகத் தொடர்புகளையும் வெளிப்படுத்துகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வில் வரலாற்று ஆய்வு முறையியல் பயன்படுத்தப்பட்டுள்ளது. பல்லவர்கால நாணயங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள், கோயில் சிற்பங்கள் மற்றும் பிற தொல்லியல் சான்றுகள் ஆகியவை முதன்மை ஆதாரங்களாகவும் வரலாற்று நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் பக்தி இலக்கியங்கள் ஆகியவை துணை ஆதாரங்களாகவும் கொண்டு தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. சேகரிக்கப்பட்ட தரவுகள் நாணயங்களில் இடம்பெற்றுள்ள சின்னங்களின் அடிப்படையில் ஒப்பீட்டு மற்றும் பகுப்பாய்வு முறையில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் பல்லவர்கால சமயநிலை, அரசியல் மற்றும் கலாச்சார அம்சங்கள் ஒருங்கிணைந்த முறையில் விளக்கப்பட்டுள்ளன.

**பல்லவர்களின் தோற்றம்**

பல்லவர்களின் தோற்றம் குறித்து வரலாற்றறிஞர்களிடையே பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. தென்னிந்தியாவை ஆட்சி செய்த பல்லவர்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதில் ஒருமித்த

Copyright © Author(s), DOI: https://doi.org/10.63300/kijts06022026 

*Kalanjiyam International Journal of Tamil Studies* *E-ISSN 2456-5148*
Volume 6 | Issue 02, August 2026 Online: www.ngmtamil.in

கருத்து இல்லை. பெரும்பாலான அறிஞர்கள், பல்லவர்கள் முதலில் தக்காணப் பகுதியை ஆண்ட சாதவாகனர்களின் கீழ் பணியாற்றிய குறுநில ஆட்சியாளர்களாக இருந்து, பின்னர் சாதவாகன அரசின் வீழ்ச்சிக்குப்பின் தெற்கே நகர்ந்து காஞ்சிபுரத்தைத் தலைநகரமாகக் கொண்டு தனி அரசை நிறுவினர் எனக் கருதுகின்றனர். இதற்கு பிராகிருத கல்வெட்டுகளும் ஆந்திரப் பகுதிகளில் கிடைத்த தொல்லியல் ஆதாரங்களும் சான்றுகளாகக் கொள்ளப்படுகின்றன.




மற்றொரு கருத்துப்படி, பல்லவர்கள் மணிபல்லவத் தீவிலிருந்து வந்த நாகர் வழித்தோன்றல்கள் ஆவர். மணிமேகலை காப்பியத்தில் இடம்பெறும் குறிப்புகளின் அடிப்படையில், சோழ இளவரசனுக்கும் நாகர் இளவரசிக்கும் பிறந்த மரபினரே பல்லவர்கள் என்றும் இவர்களுக்கு யாழ்ப்பாணப் பகுதியுடன் தொடர்பு இருந்திருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது. சில தமிழ் அறிஞர்கள் பல்லவர்கள் தொண்டை மண்டலத்தின் பூர்வீகக் குடிகள் என்றும் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படும் தொண்டைமான் மரபுடன் தொடர்புடையவர்கள் என்றும் வாதிடுகின்றனர். இதற்கு மாறாக, சில மேலைநாட்டு அறிஞர்கள் “பல்லவ” என்ற சொல் “பஹ்லவா” அல்லது “பார்த்தியர்” என்ற சொல்லின் மருவல் எனக் கருதி, பல்லவர்கள் வடமேற்கு இந்தியா அல்லது பாரசீகப் பார்த்திய இனத்தவரின் வழித்தோன்றல்கள் என்றும் கூறுகின்றனர். இவ்வாறு பல்வேறு கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டாலும் பல்லவர்களின் உண்மையான தோற்றம் குறித்து தெளிவான முடிவு எட்டப்படவில்லை. நாணயவியல் ஆதாரங்களின் அடிப்படையில், பல்லவர்கள் சங்ககாலத்திலேயே தமிழகத்தை ஆட்சி புரிந்ததனை சில ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். சங்ககாலப்பகுதில் ஏனைய வம்சங்களின் எழுச்சியினால்

பல்லவர்கள் சாதவாகனர்களின் ஆட்சிக்குட்பட்ட குறுநில மன்னர்களாகத் திகழ்ந்ததையும் சங்கமருவிய காலத்தின் இறுதியில் மீண்டும் தொண்டைமண்டலத்தில் ஆட்சியமைத்ததையும் அறிய முடிகின்றது. கரூரில் கண்டெடுக்கப்பட்ட சதுரவடிவ நாணயமானது பல்லவர்கள் வெளியிட்ட முதற்கால நாணயமாகக் கருதப்படுகின்றது. இது கி.மு. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த இளந்திரையன் எனும் பல்லவ மன்னனால் வெளியிடப்பட்டதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இந்நாணயத்தின் முன்புறத்தில் ஆமையின் மீது நிற்கும் நாகராணியின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. ஆமையின் அருகில் கொக்கு காணப்படுவதுடன், பெண் தெய்வத்தின் இடது கையில் அரிவாளும் வலது கையில் தாமரை மொட்டும் இடம்பெற்றுள்ளன. மேலும், கீழ்பகுதியில் இரண்டு மீன்களும் இடதுபுறத்தில் தொட்டிக்குள் மரமும் காணப்படுகின்றன. நாணயத்தின் பின்புறத்தில் வலதுபுறம் நோக்கிய சிங்க உருவம் காணப்படுகின்றது. சிங்கத்தின் வால் புள்ளிகளால் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்நாணயத்தில் நாகராணியின் உருவம் இடம்பெற்றிருப்பது, பல்லவர்களின் தோற்றத்துடன் நாக மரபினரின் தொடர்பை எடுத்துக்காட்டுவதாகக் கருதப்படுகின்றது. இதன் மூலம் பல்லவர்களின்வரலாற்றுத் தோற்றம் சங்ககாலத்திலேயே ஆரம்பித்திருக்கலாம் என்பதற்கான சான்று கிடைக்கின்றது. எனினும் கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியே பல்லவர்களின் பொற்காலமாக விளங்கியது. தென்னிந்திய வரலாற்றில் முக்கிய அரச மரபாக விளங்கிய பல்லவர்கள், கலை, சமயம், கல்வி மற்றும் கட்டிடக்கலையின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றியமை குறிப்பிடத்தக்கதாகும்.

**பல்லவர் நாணயங்களில் சமயம்**

பல்லவர்கள் பலவகையான கலைநயம் மிக்க நாணயங்களை வெளியிட்டுள்ளனர். இவர்களின் நாணயங்கள் தென்னகத்தின் ஆற்காடு, திருச்சி, கும்பகோணம், கரூர், காவேரிப்பூபட்டினம், காஞ்சிபுரம், தஞ்சாவூர், திருக்கோவிலூர் உட்பட பல பகுதிகளிலும் இலங்கை மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகளிலும் கிடைத்துள்ளன. பல்லவர்கள் அதிக அளவில் செப்புக் காசுகளையும் சில தங்க, வெள்ளி, ஈயக் காசுகளையும் வெளியிட்டுள்ளனர். பல்லவ நாட்டில் பொன், காணம், பணம், கழஞ்சு, மஞ்சாடி, துளைப்பொன், துளை நிறைப்பொன், பொன் முதலான நாணயங்கள் புழக்கத்தில் இருந்ததை கல்வெட்டுக்களால் அறிமுடிகின்றது. பல்லவர்கள் எழுத்துப் பொறிப்புள்ளது, எழுத்துப்பொறிப்பற்றது என இருவகை நாணயங்களையும் வெளியிட்டுள்ளனர். பல்லவ வேந்தருள் முதலாம் மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன், இராஜசிம்மன், முதலாம் பரமேஸ்வரன், இரண்டாம் நந்திவர்மன், மூன்றாம் நந்திவர்மன் ஆகியோர் தமது பெயரிலும் விருதுப் பெயரிலும் நாணயங்களை வெளியிட்டுள்ளனர். முதலாம் மகேந்திரபல்லவனது விருதுப் பெயர்களுள் "சித்திர காரப்புலி" என்பது

புகழ்மிக்கது. பல்லவர் நாணயங்களில் இலிங்கம், சங்கு, போதிமரம், குத்துவாள், கொடியுடன் கூடிய கொடிமரம், பாம்பு, சைத்தியம், தாமரை, கும்பம், முக்குடை வட்சம், சூரியன், சக்கரம், படகு, பாய்மரக்கப்பல், இரட்டை மீன், பிறை போன்ற முப்பதிற்கும் மேற்பட்ட சின்னங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு நாணயங்களிலும் ஒரு சில சின்னங்கள் மட்டுமே பொறிக்கப்பட்டுள்ளன. இதனால் பல்லவர்கள் சமயப்பொறை மிக்கவர்கள் என்பது புலனாகின்றது. தென்னிந்திய வரலாற்றில் சைவ சமய வளர்ச்சிக்கு முக்கிய மாற்றத்தை ஏற்படுத்தியவர்களாக பல்லவர்கள் காணப்பட்டனர் என்பதை அவர்களின் நாணயங்களில் இடம்பெற்றுள்ள சின்னப்பொறிப்புக்கள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. சிம்மவிஷ்ணுவின் நாணயங்களின் முற்பகுதியில் சிங்கத்தின் உருவம் காணப்படுகின்றது. சிங்க உருவம் மன்னனை குறிப்பதாக உள்ளது. அவனைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த முதலாம் மகேந்திரவர்மனானவன்

திருநாவுக்கரசரினால் சமண சமயத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாறியதாக வரலாற்றுச் செய்திகள் குறிப்பிடுகின்றன. இதன் பின்னர் பல்லவர்களின் அரச சின்னமாக நந்தியும், அரச ஆதரவு பெற்ற சமயமாக சைவ சமயமும் முதன்மை பெற்றது. தனது மதமாற்றத்தை அடையாளப்படுத்தும் வகையில் மகேந்திரவர்மன் நாணயங்களின் முன்பகுதியில் காளை (நந்தி) உருவத்தையும், பின்பகுதியில் சிவலிங்க உருவத்தையும் பொறித்தான். இவ்வகையான நாணயங்கள் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் கிடைத்திருப்பது, அவன் காலத்தில் தென்னகம் முழுவதும் சைவசமயம் புத்துயிர் பெற்றிருந்ததை எடுத்துரைக்கின்றது. அதனைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட பல பல்லவ மன்னர்களின் நாணயங்களிலும் காளை வடிவம் இடம்பெற்றிருப்பது சைவ சமயத்தின் செல்வாக்கும் வளர்ச்சியும் அதிகரித்திருந்ததை உறுதிப்படுத்துகின்றது.

சைவ சமயத்தவர்களின் மரபில் காளை, குறிப்பாக நந்தி, சிவபெருமானின் அடையாளமாக வணங்கப்படுகின்றது. ஆலயங்களில் நந்தி பக்தர்களுக்கும் இறைவனுக்கும் இடையிலான தொடர்பின் சின்னமாகக் கருதப்படுவதுடன், பக்தர்களின் வேண்டுதல்களை சிவபெருமானிடம் கொண்டு சேர்க்கும் தெய்வீக வடிவமாகவும் நம்பப்படுகின்றது. பல்லவர் நாணயங்களின் முன்பகுதியில் நந்தி உருவங்கள் பல்வேறு அமைப்புகளில் காணப்படுகின்றன. சில நாணயங்களில் நந்தி வலதுபுறம் நோக்கியும், சிலவற்றில் இடதுபுறம் நோக்கியும் நிற்கின்ற நிலையில் பொறிக்கப்பட்டுள்ளது. ஆரம்பகால பல்லவ நாணயங்களில் அலங்காரமற்ற எளிய நந்தி உருவங்கள் காணப்படுகின்றன. பின்னாளில் வெளியிடப்பட்ட நாணயங்களில் நந்தி உருவம் அலங்காரங்களுடன் கலைநயமிக்க வடிவில் இடம்பெற்றுள்ளது. இது மன்னர்களின் சமய பற்றினையும் இந்துக் கலையுடன் கொண்ட தொடர்பினையும் காட்டுகின்றது.

சிவ வழிபாட்டின் அடையாளமான சிவலிங்க வடிவமும் நாணயங்களில் முக்கிய சின்னமாக காணப்படுகின்றது. சில நாணயங்களில் நந்தி உருவத்தின் மேற்பகுதியிலும் சிலவகை நாணயங்களின் பின்பகுதியில் தனித்த சிவலிங்கமாகவும் பொறிக்கப்பட்டுள்ளது. இது மன்னர்களின் சைவப்பற்றையும், சைவ சமயத்திற்கு வழங்கப்பட்ட முக்கியத்துவத்தையும் எடுத்துக்காட்டுகின்றது. சிவனை இலிங்கமாக வழிபடும் மரபு பல்லவர்காலத்தில் முதன்மை பெற்றது. கண்ணப்பநாயனார் வரலாற்றில் இலிங்க வழிபாடு சிறப்பிடம் பெற்றமையால் ஆறுபத்துமூன்று நாயன்மார்களிலில் ஒருவராக போற்றப்படுகின்றார். பல்லலர்கால குடைவரைகளிலும் மூலமூர்த்தியாக சிவலிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு மக்களால் வழிபட்டமை இலிங்க வழிபாட்டினை உணர்த்துகின்றமை சிறப்பாகும். ஆர்காட்டில் கிடைத்த முதலாம் மகேந்திரவர்மனின் நாணயமொன்றில் முன்பகுதியில் காளை உருவமும், காளைக்கு மேலே 'அலுப்த்த' என்று பல்லவ கிரந்த எழுத்துக்களில் அவனின் விருதுப்பெயர் எழுதப்பட்டுள்ளது. இதன் பொருள் ஆசைகள் அற்றவன் என்பதே ஆகும். நாணயத்தின் பின்பகுதியில் இரண்டு விளக்குகளுக்கு இடையில் உடுக்கை உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. உடுக்கை சிவனை அடையாளப்படுத்தும் முக்கிய சின்னமாகக் கருதப்படுகின்றது. அவ்வாறே சைவசமயத்திற்கு மாற்றமான மகேந்திரவர்மன் சிவனை அனைத்து வழிகளிலும் வழிப்பட்டதனை அவனது நாணயங்கள் பறைசாற்றுகின்றன. இத்தகைய சைவம்சார்ந்த சான்றுகளுக்கு ஆதாரமாக நாயன்மார்களின் திருமுறைகள், தேவாரப் பதிகங்கள் மற்றும் பல்லவர்கால கல்வெட்டுகள் மற்றும் சைவ ஆலயங்கள் சைவ சமய வளர்ச்சியையும் பல்லவர்களின் சமய ஆதரவையும் தெளிவுபடுத்துகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

சைவ சமயத்தைத் தொடர்ந்து வைணவ சமயமும் பல்லவர்காலத்தில் முக்கியத்துவம் பெற்ற சமய நெறியாக விளங்கியது. விஷ்ணுவின் அவதாரங்கள் மக்கள் மத்தியில் பெரிதும் போற்றப்பட்டதுடன், மகாபாரதம் மற்றும் இராமாயணம் போன்ற இதிகாசக் கதைகள் சமய நம்பிக்கைகளுடனும் சமூக வாழ்வுடனும் நெருங்கிய தொடர்பைப் பெற்றிருந்தன. பல்லவ மன்னர்கள் வைணவ சமய வளர்ச்சிக்கும் முக்கிய ஆதரவை வழங்கினர். அவர்கள் விஷ்ணுவிற்காக பல கோயில்களை நிர்மாணித்தனர். குறிப்பாக நரசிம்மவர்மன் காலத்தில் செதுக்கப்பட்ட மாமல்லபுரத்தின் பஞ்சரதங்கள் மற்றும் ஆதிவராஹர் மண்டபம் போன்ற சிற்பக் கலைச் சின்னங்கள் வைணவ சமய செல்வாக்கை வெளிப்படுத்துகின்றன. காஞ்சிபுரத்தில் அமைந்துள்ள வைகுண்ட பெருமாள் கோயில் பல்லவர்களின் வைணவ பற்றிற்குச் சிறந்த சான்றாகக் கருதப்படுகின்றது. ஆழ்வார்களும் வைணவத்தை வளர்த்தனர். அவ்வாறே பல்லவர்களின் நாணயங்களும் வைணவ சமயத்தின் சிறப்பினை வெளிப்படுத்துகின்றன. பல நாணயங்களின் பின்பகுதியில் சங்கு , சக்கரம் போன்ற

உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவை இரண்டும் விஷ்ணுவின் முக்கிய அடையாளச் சின்னங்களாகும். குறிப்பாக சங்கு சின்னம் பல வடிவங்களில் காணப்படுகின்றது. சில நாணயங்களில் நிமிர்ந்த நிலையில் சங்கு பொறிக்கப்பட்டுள்ளதுடன், சிலவற்றில் வட்ட வடிவத்திற்குள் சங்கு அமைக்கப்பட்டுள்ளது. இது நாணயக் கலைநயத்தையும் சமயச் சின்னங்களின் முக்கியத்துவத்தையும் எடுத்துக்காட்டுகின்றது.

நரசிம்மவர்மனின் ஒரு வகை நாணயத்தின் முன்பகுதியில் காளை உருவமும், பின்பகுதியில் யானை உருவமும் காணப்படுகின்றது. அந்த யானை உருவம் மாமல்லபுரத்தில் உள்ள யானைச் சிற்பத்தின் கலைவடிவத்துடன் ஒத்த தன்மையில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இதனால் மாமல்லபுரக் கற்றளி மற்றும் சிற்பக் கலையின் நினைவாக இந்நாணயங்கள் வெளியிடப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது. அத்துடன் இவனது சில நாணயங்களில் பன்றி உருவம் காணப்படுகின்றது. குறிப்பாக இவ்வகை நாணயங்களை சாளுக்கியர் மீதான போர் வெற்றியின் நினைவாக வெளியிட்டாலும் வராக உருவமானது விஷ்ணுவின் வராக அவதாரமாக கருதமுடியும். இவன்காலத்து சிற்பங்களில் வராக சிற்பங்கள் காணப்படுவதும் முக்கிய ஆதாரமாகும். பல்லவ நாணயங்களில் மீன் உருவங்களும் காணப்படுகின்றன. இரண்டாம் நரசிம்மவர்மனின் ஒருவகை நாணயத்தின் முன்பகுதியில் வலதுபக்கம் நோக்கிநிற்கும் காளைக்குமேல் ஸ்ரீநிதி என்று பல்லவ கிரந்த எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ளது. நாணயத்தின் பின் பகுதியில் அலங்கரிக்கப்பட்ட வட்டத்தினுல் ஒற்றை மீன் காணப்படுகின்றது. மீன் சின்னம் பொதுவாகப் பாண்டியர்களின் அரச சின்னமாக அறியப்பட்டாலும் இந்த வகை நாணயத்தில் காணப்படும் மீன் வடிவம் வைணவத்தில் விஷ்ணுவின் முதல் அவதாரமான மச்சாவதாரத்தையும் பிரதிபலிப்பதாக விளங்குகின்றது. பாண்டியர்கள் தங்களின் அரச சின்னமாக இரட்டை மீன் சின்னத்தினை அதிகம் பயன்படுத்தினர். ஆனால் இவ் நாணயத்தில் தனித்த மீன் சின்னம் கலைநயத்துடன் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் இராஜசிம்மன் வைணவபக்தனாக காணப்பட்டதனை பல சான்றுகள் கூறிநிற்கின்றமை சிறப்பாகும். எனவே இவநாணயம் வைணவத்தின் அடையாளமாக கொள்ளமுடியும். சில பல்லவ நாணயங்களில் சில பூ இதழ்கள், பாம்பு, வைணவ அடையாளங்களும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இச்சின்னங்கள் பல்லவர்காலத்தில் சைவம் மற்றும் வைணவம் இரண்டும் அரச ஆதரவு பெற்ற சமயங்களாக வளர்ச்சியடைந்ததையும், சமய ஒற்றுமை நிலவியதையும் வெளிப்படுத்துகின்றன. நாலாயிர திவ்யப் பிரபந்தம், பல்லவர்கால கல்வெட்டுகள் மற்றும் மாமல்லபுரச் சிற்பங்கள் ஆகியவை வைணவ சமய வளர்ச்சியை உறுதிப்படுத்தும் முக்கிய வரலாற்றுச் சான்றுகளாகும்.

Copyright © Author(s), DOI: https://doi.org/10.63300/kijts06022026 

பல்லவர்காலத்தில் முருக வழிபாடு முக்கியத்துவம் பெற்றிருந்தது. இதனை பல்லவர்கால நாணயங்கள் தெளிவாக வெளிப்படுத்துகின்றன. வேல், மயில், சேவல் போன்ற சின்னங்கள் முருக வழிபாட்டின் அடையாளங்களாகக் கருதப்பட்டன. குறிப்பாக முதலாம் பரமேஸ்வரவர்மனின் நாணயங்களில் காணப்படும் மயில் சின்னம் குறிப்பிடத்தக்கதாகும். திருக்கோவிலூரில் கிடைத்த ஒரு நாணயத்தின் முன்பகுதியில் வலதுபுறம் நோக்கி நிற்கும் காளையின் மேல் “பரம” என்று பல்லவத் தமிழ் எழுத்துகளில் பொறிக்கப்பட்டுள்ளதுடன், அதன் பின்பகுதியில் வட்டத்திற்குள் வலதுபுறம் நோக்கி நிற்கும் மயில் உருவம் காணப்படுகின்றது. அதேபோல், கரூரில் கிடைத்த மற்றொரு நாணயத்தின் முன்பகுதியில் காளையின் மேல் “தம” என்ற சொல் பொறிக்கப்பட்டதுடன், பின்பகுதியில் வட்டத்திற்குள் மயில் உருவம் இடம்பெற்றுள்ளது. சங்ககால முத்திரை நாணயங்களிலும் மயில் உருவம் முருக வழிபாட்டின் அடையாளமாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இதனைத் தொடர்ந்து பல்லவர்கால நாணயங்களிலும் மயில் சின்னம் இடம்பெற்றிருப்பது முருக வழிபாட்டின் தொடர்ச்சியையும் அதன் சமயச் செல்வாக்கையும் உணர்த்துகின்றது. பல்லவர்காலக் கோயில்களில் காணப்படும் சோமாஸ்கந்த சிற்பங்கள் முருக வழிபாட்டின் செல்வாக்கை உறுதிப்படுத்துகின்றன. குறிப்பாக காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயிலும் மாமல்லபுரக் குடைவரைக் கோயில்களிலும் சிவன், பார்வதி ஆகியோருடன் குழந்தை முருகன் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வுருவங்கள் பல்லவர்கால அரச ஆதரவுடன் சோமாஸ்கந்த வழிபாடு வளர்ச்சி பெற்றிருந்ததை வெளிப்படுத்துகின்றன. பக்தி இயக்க வளர்ச்சியால் சைவ நாயன்மார்களின் பாடல்களில் முருகன் குறித்த குறிப்புகள் இடம்பெறுவது, அக்கால சமயச் சூழலில் முருக வழிபாடு முக்கிய இடம்பெற்றிருந்ததை எடுத்துக்காட்டுகின்றது. அந்தவகையில் சிற்பங்கள், கல்வெட்டுகள் மற்றும் பக்தி இலக்கியங்கள் என்பவற்றுடன் இவ் நாணயங்களும் பல்லவர்கால முருக வழிபாட்டின் நிலையை விளக்குகின்றமை சிறப்பாகும்.

பல்லவர்காலத்தில் விநாயகர் (கணபதி) வழிபாடு முக்கியத்துவம் பெற்றதாகக் காணப்படுகின்றது. நரசிம்மபல்லவன் சாளுக்கியர்களின் தலைநகரான வாதாபியைத் தாக்கி அழித்து, இரண்டாம் புலிகேசியைக் கி.பி. 642ஆம் ஆண்டு கொன்றதாக வரலாற்று குறிப்புகள் கூறுகின்றன. அப்போது அவரது படையில் தளபதியாக இருந்த பரஞ்சோதி என்பவர் அங்கிருந்து கணபதி சிலையைக் கொண்டுவந்து தன் ஊரான திருச்செங்காட்டங்குடியில் நிறுவியதாக ஒரு மரபுக் கதை உள்ளது. இவரே பின்னாளில் சிறுத்தொண்டர் என்ற நாயன்மாராக அறியப்பட்டவர் எனவும் கூறப்படுகின்றது. இதன் அடிப்படையில் “வாதாபி கணபதிம்” என்ற கிருதி முத்துசாமிதேக்ஷிதரால் இயற்றப்பட்டதாகவும் பொதுவாகக் குறிப்பிடப்படுகின்றது. ஆனால்

தற்போது திருச்செங்காட்டங்குடியில் உள்ள விநாயகர் சிலை சாளுக்கியக் கலையம்சம் கொண்டது என்று உறுதியாகச் சொல்ல முடியாது; அது பின்னர் உருவான அமைப்பாகவே கருதப்படுகின்றது.பல்லவர் மற்றும் பாண்டியர் இருவரும் களப்பிரர்களை வென்று தங்கள் ஆட்சியை நிலைநிறுத்திய பின்னர், கருங்கல்லில் குகைக் கோயில்கள் மற்றும் கட்டிடக் கோயில்கள் அமைக்கும் மரபை வளர்த்தனர். குறிப்பாக பல்லவர்காலத்தில் இராசசிம்ம பல்லவனின் (கி.பி. 690–725) காலத்தில்தான் கோயில்களில் விநாயகர் சிலைகள் தெளிவாகவும் நிலையான இடத்திலும் இடம்பெறத் தொடங்குகின்றன. இதனை உறுதிப்படுத்தும் வகையில் பல்லவர்கால நாணயங்களில் மதச் சின்னங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக நரசிம்ம பல்லவனின் நாணயங்களில் முன்பகுதியில் காளை உருவமும் அதற்கு மேல் கடும்பிடுகு என்ற எழுத்துப்பொறிப்பு காணப்படுவதுடன் பின் பகுதியில் வராகம் சின்னமும் அதற்கு முன் வெற்றி சின்னமும் காணப்படுகின்றது. இவ்வகை நாணயங்களில் சாளுக்கிய வெற்றியினையும் கணபதி வழிபாடு கொண்டுவரப்பட்டசெய்தியினையும் அறியமுடிகின்றது. சில நாணயங்களில் யானை உருவம் பொறிக்கப்பட்டுள்ளனை கணபதி வழிபாட்டின் அடையாளமாகும். இவ்வாறான நாணயச் சின்னங்கள், அரசியல் நிகழ்வுகளுடன் சமய மரபுகளும் இணைந்து வளர்ந்திருந்ததை காட்டுகின்றன. **பல்லவர்கள் சூரியன் மற்றும் சந்திரனை வழிபட்டதற்கான சான்றுகளை அவர்களது நாணயங்கள்** வெளிப்படுத்துகின்றன. குறிப்பாக பல்லவர்கால நாணயங்களில் காணப்படும் சூரியச் சின்னங்கள் இதற்கான முக்கிய ஆதாரங்களாகக் கருதப்படுகின்றன. திருக்கோயிலூர், ஆரணி போன்ற இடங்களில் கிடைத்த நாணயங்களின் முன்பகுதியில் வலதுபுறம் நோக்கி நிற்கும் காளையின் மேல் சங்கு, பிறை, பாம்பு போன்ற சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அதன் பின்பகுதியில் சூரிய உருவம் இடம்பெற்றுள்ளது. சில நாணயங்களில் சிறிய வட்ட வடிவத்திலிருந்து சூரியக்கதிர்கள் வெளிநோக்கி பரவுவது போன்றும் சில நாணயங்களில் மலைகளிலிருந்து சூரியன் தோன்றுவது போன்றும் பொறிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று பல நாணயங்களின் முன்பகுதியில் காளை உற்பட ஏனைய சின்னங்களுடன் பிறை வடிவம் பொறிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான சின்னங்கள் பல்லவர்காலத்தில் சூரிய மற்றும் சந்திர வழிபாடு அறியப்பட்டிருந்ததையும், அதற்கு சமய ரீதியான முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்ததையும் உணர்த்துகின்றன. பல்லவர்காலக் கோயில்களின் சிற்பக்கலையிலும் சூரிய உருவங்கள் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். குறிப்பாக காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயிலில் சூரியன் மற்றும் சந்திரன் தொடர்பான உருவச்சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன. இவ்வுருவங்கள் சூரியன் தெய்வீக சக்தியாகக் கருதப்பட்டதைக் காட்டுகின்றன. அதேபோல், பல்லவர்கால கல்வெட்டுகளில் அரசர்கள் தங்களை தெய்வ அருளால் ஆட்சி செய்தவர்களாகக்

Copyright © Author(s), DOI: https://doi.org/10.63300/kijts06022026 

குறிப்பிட்டிருப்பதும், வேதசமய மரபுகளுக்கு வழங்கப்பட்ட ஆதரவும் சூரிய வழிபாட்டின் செல்வாக்கை மறைமுகமாக உணர்த்துகின்றன. மேலும், வேத மரபில் ஆதித்ய வழிபாடு முக்கிய இடம் பெற்றிருந்ததனால், பல்லவர்களும் அந்த மரபின் தாக்கத்தில் சூரிய வழிபாட்டை ஏற்றுக்கொண்டிருக்கலாம் என கருதப்படுகின்றது. இவ்வாறாக நாணயங்கள் சூரிய ,சந்திர வழிபாட்டை விளக்கும் சான்றுகளாக விளங்குகின்றன.

பல்லவர் நாணயங்களில் சிலவற்றில் மரச் சின்னம் காணப்படுவது, தலவிருட்ச வழிபாடு இடம்பெற்றிருந்ததை உணர்த்துகிறது. நாணயங்களின் பின்பகுதியில் இவ்வகை சின்னப் பொறிப்புகள் காணப்படுகின்றன. பல கிளைகளைக் கொண்ட மரம், வேலியிடப்பட்டமரம், பீடத்தின் மேல் அமைந்த மரம் போன்ற வடிவங்கள் இதில் இடம்பெறுகின்றன. இவை ஆலயங்களில் தலவிருட்ச வழிபாடு முக்கியத்துவம் பெற்றிருந்ததை வெளிப்படுத்துகின்றன. பல்லவர்காலக் கோயில் சிற்பங்களிலும் புனித மரங்கள் வழிபாட்டுடன் தொடர்புபடுத்தப்பட்டிருப்பது காணப்படுகின்றது. குறிப்பாக குடைவரைக் கோயில்கள் மற்றும் கற்கோயில்களின் சுற்றுப்புறச் சித்திரங்களில் மரம்–தெய்வம் தொடர்பான குறியீட்டு வடிவங்கள் இடம்பெறுகின்றன. அதேபோல், சங்ககால இலக்கியங்களிலும் மரவழிபாடு குறிப்பிடப்படுவது, இத்தகைய மரபின் தொடர்ச்சியை காட்டுகின்றது. இதனைத் தவிர, பிற்கால சோழர்கால கல்வெட்டுகளிலும் தலவிருட்சம் கோயில்களின் முக்கிய அங்கமாகக் குறிப்பிடப்படுவது, இந்த வழிபாட்டு மரபு நீண்ட கால தொடர்ச்சியைக் கொண்டிருந்ததை உறுதிப்படுத்துகின்றது. இவ்வாறு நாணயங்களில் உள்ள விருட்ச சின்னங்கள் இந்துசமய நம்பிக்கைகளாக விளங்குகின்றன. பல்லவர்களின் நாணயங்களில் அவர்களின் குல நம்பிக்கையினை அறியமுடிகின்றது.

பல்லவர்கள் தோற்றம் பற்றிய ஆய்வுகள் பல செய்திகள் காணப்பட்டாலும். பல்லவர்களின் நாணயங்களினூடாக அவர்களின் குல தோற்றத்தினை அறியமுடிகின்றது. சில நாணயங்களின் முற்பகுதியில் காளையின் உருவம் காணப்படுதுடன் நாணயத்தின் பிற்பகுதியில் பாத்திரத்தின் உருவம் காணப்படுகின்றது. சில நாணயங்களில் கைபிடியுடன் பாத்திரமும் சில வகை நாணயங்களில் கைபிடியற்ற பாத்திரத்தின் வடிங்களும் காணப்படுகின்றன. இவை பல்லவர்கள் தம்மை பாத்திரத்தில் இருந்து தோன்றியவர்கள் என்ற நம்பிக்கை கொண்டவர்கள் என்பதை வெளிப்படுத்துகின்றன. இதனை உறுதிப்படுத்துவதாக பள்ளன்கோயில் செப்பேட்டில்

பாத்ரஸ்கலித வ்ருத்தீநாம் என்ற பொறிப்பு காணப்படுகின்றது. இவ் பொறிப்பானது பல்லவர்கள் தங்களை பாத்திரத்திலிருந்து பிறந்த குலத்தினர் என்று அழைத்ததனை உறுதிசெய்கின்றது.

பல்லவர்கால நாணயங்களில் கோயில் உருவங்கள் இடம்பெற்றிருப்பது, அக்கால கோயில் கட்டிடக்கலையின் வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் முக்கியமான சான்றாகும். இராஜசிம்மனின் சில நாணயங்களின் முன்பகுதியில் கோயில் வடிவமும், பின்பகுதியில் நான்கு இதழ்கள் கொண்ட சின்னமும் காணப்படுகின்றது. "ஸ்ரீபர" என்று பொறிக்கப்பட்டுள்ள மற்றொரு காசிலும் இதே சின்னம் இடம்பெறுகின்றது. இக்காசு காஞ்சிபுரத்தில் கிடைத்ததாகும். இதன் எடை 2.35 கிராம் ஆகும். இது கலப்பு உலோகத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. இக்காசில் காணப்படும் கோயில் வடிவம் மாமல்லபுரக் கடற்கரைக் கோயில் அல்லது காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயிலின் அமைப்பை ஒத்ததாகத் தோன்றுகின்றது. இவை இராசசிம்ம பல்லவனின் சிறந்த கட்டிடக் கலைப் படைப்புகளாகும். இக்கோயில்கள் பின்னர் உருவான திருவதிகை வீரட்டானேஸ்வரர் கோயில், தஞ்சை பெருவுடையார் கோயில் போன்றவற்றின் விமான அமைப்புக்கு முன்மாதிரியாகவும் விளங்கியதாகக் கருதப்படுகின்றது. அதேபோல், மற்றொரு நாணயத்தில் முன்பகுதியில் இடதுபுறம் நோக்கி நிற்கும் காளையின் மேல் பிறைச் சின்னம் காணப்படுகின்றது. பின்பகுதியில் அலங்கரிக்கப்பட்ட வட்டத்திற்குள் கோயில் வடிவம் இடம்பெற்றுள்ளது. இது கும்பகோணம் பகுதியில் கிடைத்த நாணயமாகும். இந்நாணயத்தில் காணப்படும் கோயில் வடிவம் மாமல்லபுரத்தில் உள்ள திரௌபதி இரதம் போன்ற குடைவரைக் கட்டிட அமைப்பை ஒத்ததாக உள்ளது. எனவே இவ் நாணயம் கொற்றவை வழிபாட்டின் அடையாளமாகவும் கொள்ளமுடியும். இவ்வாறு பல்லவர்கால நாணயங்களில் காணப்படும் கோயில் சின்னங்கள், அக்காலத்தில் கோயில் கட்டிடக்கலைக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவத்தையும், கட்டிட வடிவமைப்புகள் நாணயக் கலைமூலம் சமூகத்தில் பரவலாகப் பிரதிபலிக்கப்பட்டதையும் உணர்த்துகின்றன. குறிப்பாக, கொற்றவைக்கு எழுப்பப்படும் கோயில்கள் குடிசை வடிவில் அமைய வேண்டுமென்ற தமிழக மரபு குறித்து சிலப்பதிகாரம் குறிப்பிடுவது இதனை உறுதிப்படுத்துகின்றது. இதனை இரா. நாகசாமி "குச்சரக் குடிசை" என விளக்குகின்றார். மகேந்திரவர்மன் குடவரைக்கோயில்களையும் நரசிம்மவர்மன் இரதக்கோயில்களையும் இராஜசிம்மன் கற்றளிகளையும் அமைத்ததனை சான்றுகள் கூறுகின்றன. இவ்வாறாக, பல்லவர்கால நாணயங்கள் கோயில் கட்டிடக் கலை வளர்ச்சியை வெளிப்படுத்தும் முக்கிய வரலாற்றுச் சான்றுகளாக விளங்குகின்றன.

பல்லவர் நாணயங்களில் இந்து சமயச் சார்புடைய பல்வேறு சின்னங்கள் காணப்படுகின்றன. வில், வஜ்ராயுதம், பாம்பு, கொடிமலர், கொடிச்சீலை, குத்துவிளக்கு, வெண்கொற்றக்குடை, மலைமுகடு, நண்டு, அரச இலை, வாள், சுவஸ்திகா போன்ற பல சின்னங்கள் நாணயங்களில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இச்சின்னங்கள் வெறும் அலங்காரக்

Copyright © Author(s), DOI: https://doi.org/10.63300/kijts06022026

கூறுகளாக மட்டுமல்லாமல், அக்கால அரசியல் அதிகாரம், சமய நம்பிக்கை மற்றும் சமூக மரபுகளை வெளிப்படுத்தும் குறியீடுகளாகவும் விளங்குகின்றன. குறிப்பாக வஜ்ராயுதம் இந்திரனின் சக்தியைக் குறிக்கும் தெய்வீக ஆயுதமாகவும், சுவஸ்திகா சின்னம் சூரிய வழிபாடு மற்றும் நல்வாழ்வு குறியீடாகவும் விளக்கப்படுகின்றது. பாம்பு சின்னம் சைவ சமய மரபில் சிவனுடன் தொடர்புடையதாகக் கருதப்படுகின்றது. அதேபோல் குத்துவிளக்கு மற்றும் கொடிமலர் போன்றவை கோயில் வழிபாட்டு மரபையும், தெய்வீக ஒளியையும் குறிக்கும் சின்னங்களாகும்.வெண்கொற்றக்குடை அரசரின் உயர்ந்த அதிகாரத்தையும் இறைமையுடன் இணைந்த ஆட்சியையும் வெளிப்படுத்தும் அடையாளமாகக் கருதப்படுகின்றது. அரச இலை மற்றும் கொடிச்சீலை போன்ற சின்னங்கள் அரசாட்சியின் பெருமையையும் செழிப்பையும் பிரதிபலிக்கின்றன. வில் மற்றும் வாள் போன்ற ஆயுதச் சின்னங்கள் அரசரின் வீரத்தையும் பாதுகாப்பு சக்தியையும் காட்டுகின்றன. இதனால் பல்லவர் நாணயங்களில் இடம்பெறும் இச்சின்னங்கள், அக்காலத்தில் இந்து சமய மரபுகள் அரச அதிகாரத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததை வெளிப்படுத்துகின்றன. நாணயக் கலை மூலமாக சமய நம்பிக்கைகள்சமூகத்தில் பரவலாகப் பிரதிபலிக்கப்பட்டிருந்ததை உணரமுடிகின்றது.

பல்லவர் நாணயங்களில் காணப்படும் எழுத்துப்பொறிப்புகள் மன்னர்களின் விருதுப்பெயர்களாக காணப்படுகின்றன. இவை பல்லவ கிரந்தம் மற்றும் பல்லவ தமிழ் எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ளன. பல்லவர்காலத்தில் இந்து சமய செல்வாக்கினால் சமஸ்கிருத மொழியும்,கிரந்த எழுத்துக்களும் அரச அந்தஸ்தினை பெற்றன. நாயன்மார்களின் பதிகங்களும் , காஞ்சி கடிகையும் பல்லவர்கால கல்வி வளர்ச்சியில் பங்களிப்பு வழங்கின. மன்னர்களும் தங்களுக்கு தெய்வீக விருதுப்பெயர்களை பெற்றனர். இவ் பெயர்கள் பக்தியின் செல்வாக்கினைகாட்டிநிக்கின்றன. நாணயங்களில் முன்பகுதியில் காளைக்கு மேல் பகுதியில் மன்னனின் விருதுப்பெயர்கள் சுருக்கமாக பொறிக்கப்பட்டுள்ளன. முதலாம் மகேந்திரவர்மனின்

நாணயங்களில் 'நஹிகாமுத்ரிக, பகாபிடு(கு) தண்டிக்கல, லக்ஷித, அலுப்த்த, தர்பவிஷ, வபு, ஶ்ரீவம்பு' போன்ற விருதுப்பெயர்கள் காணப்படுகின்றன. இவற்றில் பகாபிடுகு என்பதன் பொருளாக இந்திரனின் வச்சிராயுதம் போன்று பிளக்கமுடியாத இடி போன்றவன் என்று குறிப்பிடப்படுகின்றது. முதலாம் நரசிம்மவர்மன் நாணயங்களில் 'கடும்பிடுகு, அலரி போன்ற விருதுப்பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளது. பரமேஸ்வரனின் நாணயங்களில் பரம என்ற பொறிப்பும், இராஜசிம்மனின் நாணயங்களில் 'ஶ்ரீறிநிதி, ஶ்ரீபர, காடவ' போன்ற விருதுப்பெயர்களும், நந்திவர்மன் நாணயங்களில் 'நந்தி' என்ற பொறிப்பும்காணப்படுகின்றது. இவை மன்னனின் சிறப்பினை போற்றுவதுடன்

தனிமனித ஒழுக்கத்தின் அடையாளமாகவும், இந்துசமய தத்துவத்தினை போதிப்பதாகவும் காணப்படுகின்றது.பல்லவர்காலத்தில் ஏற்பட்ட பக்தி நெறியானது தமிழகமெங்கும் பரவியிருந்ததை பல்லவர்கால நாணயங்கள் மற்றும் கல்வெட்டுகள் உறுதிப்படுத்துகின்றன. பல நாணயங்கள் ஆலயக் கட்டுமானம், பராமரிப்பு மற்றும் வழிபாட்டிற்காக வழங்கப்பட்டதாக கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. குறிப்பாக காஞ்சிபுரம், மாமல்லபுரம் போன்ற பகுதிகளில் காணப்படும் பல்லவர்கால கல்வெட்டுகள் கோயில்களுக்கு வழங்கப்பட்ட நிலதானங்கள், நிவந்தங்கள் மற்றும் வழிபாட்டு செலவுகள் பற்றிய தகவல்களை வழங்குகின்றன. இவை மன்னர்களின் சமய ஆதரவையும், அக்காலத்தில் நிலவிய வலுவான பொருளாதார அமைப்பையும் வெளிப்படுத்துகின்றன.

பக்திநெறி தமிழகத்தை மட்டுமன்றி இலங்கை மற்றும் தென்கிழக்காசிய பகுதிகளிலும் பரவியது குறிப்பிடத்தக்கதாகும். பல்லவ மன்னர்களின் அரசியல் செல்வாக்கும், கடல்கடந்த வணிகத்தில் ஈடுபட்ட வணிகக் கணங்களின் செயல்பாடுகளும் இதற்கு முக்கிய காரணங்களாக இருந்தன. இலங்கையில் பல்லவர்களின் நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பல்லவர்களின் இலங்கை தொடர்பினைத் தொடர்ந்து இலங்கை மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் பல்லவ நாணயங்களின் தாக்கத்தினை காணமுடிகின்றது. ஈழத்து திருத்தலங்கள் குறித்து நாயன்மார் பாடல்களில் காணப்படும் குறிப்புகளும், மடங்களின் வளர்ச்சியும் பக்தி நெறியின் தாக்கம் இலங்கையிலும் இருந்ததை உணர்த்துகின்றன. தென்கிழக்காசியாவில் கம்போடியா தாய்லாந்து மற்றும் இந்தோனேசியா போன்ற பகுதிகளிலும் இந்து சமயச் சின்னங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக லிங்க வழிபாடு, விஷ்ணு–சிவ வடிவங்கள் மற்றும் சில கல்வெட்டு வடிவங்கள் பல்லவ–தென்னிந்திய கலாச்சார தாக்கத்துடன் தொடர்புபடுத்தப்படுகின்றன என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இது பல்லவர் காலத்தில் நடந்த கலாச்சார பரவலை உறுதிப்படுத்தும் முக்கிய ஆதாரமாகும். குறிப்பாக பல்லவ மன்னன் நரசிம்மவர்மனின் நாணயங்களில் முன்பகுதியில் காளையின் உருவமும், பின்பகுதியில் பாய்மரக் கப்பலின் உருவமும் காணப்படுகின்றன. இவ்வகை நாணயங்கள் பல்லவர்களின் கடல்கடந்த வணிகத் தொடர்புகளை வெளிப்படுத்துகின்றன. தாய்லாந்தில் கண்டுபிடிக்கப்பட்ட நரசிம்மவர்மனின் நாணயமானது வணிகத்துடன் இணைந்து சமயப் பரவலும் இடம்பெற்றிருந்ததை உறுதிப்படுத்துகின்றன.இவ்வாறாக நாணயங்கள் பல்லவர்கால பக்திநெறி பன்னாட்டு தொடர்புகளுடனும் வளர்ந்திருந்ததை வெளிப்படுத்துகின்றன.

பல்லவர்காலத்தில் இந்துசமயம் புத்துயிர் பெற்ற அதேவேளை சமணம் மற்றும் பௌத்தமும் சமூகத்தில் தங்களது செல்வாக்கினைத் தொடர்ந்து கொண்டிருந்தன என்பதை பல்லவர்காலநாணயசான்றுகள் உணர்த்துகின்றன. குறிப்பாக சில நாணயங்களில் காணப்படும் வேலியிடப்பட்டமரம், சைத்தியம் மற்றும் அரசஇலை போன்ற சின்னங்கள் பௌத்த சமயத் தாக்கத்தைக் காட்டுகின்றன. போதிமரம் புத்தரின் ஞானோதயத்தை நினைவுபடுத்தும் முக்கிய பௌத்த அடையாளமாக என்று சிலர் கருதுகின்றனர். முதலாம் மகேந்திரவர்மன் ஆரம்பத்தில் சமண சமயத்தைத் தழுவியிருந்ததாகவும் பின்னர் திருநாவுக்கரசரின் தாக்கத்தால் சைவ சமயத்திற்கு மாறியதாகவும் வரலாற்றுச் செய்திகள் குறிப்பிடுகின்றன. இதன் மூலம் பல்லவர்காலத்தில் சமண சமயமும் குறிப்பிடத்தக்க செல்வாக்குடன் இருந்தமைஅறியப்படுகின்றது. காஞ்சிபுரம் உள்ளிட்ட பல பகுதிகளில் சமணப் பள்ளிகள் மற்றும் பௌத்த விகாரைகள் இருந்தமை கல்வெட்டுகள், இலக்கியங்கள் மற்றும் சீனப் பயணி யுவான்சுவாங் குறிப்புகள் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றன. எனவே பல்லவர்கால நாணயங்களில் காணப்படும் சில சின்னங்கள், அக்காலத்தில் சமணம் மற்றும் பௌத்தம் ஆகிய சமயங்களும் சமுதாய வாழ்விலும் கலாச்சார வளர்ச்சியிலும் முக்கிய இடத்தைப் பெற்றிருந்ததை வெளிப்படுத்துகின்றன அதேவேளை அரசர்கள் பல நாணயங்களை சமய வளர்ச்சிக்கு தானம் வழங்கியதையும் அறியமுடிகின்றது.

**முடிவுரை:**

பல்லவர்கால நாணயங்கள் அக்கால அரசியல், சமயம், கலை, பொருளாதாரம் மற்றும் கலாச்சார நிலைகளை வெளிப்படுத்தும் முக்கிய வரலாற்றுச் சான்றுகளாக விளங்குகின்றன. பல்லவர்கள் வெளியிட்ட நாணயங்களில் இடம்பெற்றுள்ள நந்தி, சிவலிங்கம், சங்கு, சக்கரம், மயில், சூரியன், சந்திரன், போதிமரம், சைத்தியம், கோயில் வடிவம் போன்ற பல்வேறு சின்னங்கள், பல்லவர்கால சமய வாழ்வின் பல்துறை தன்மையை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. குறிப்பாக சைவம் மற்றும் வைணவம் அரச ஆதரவுடன் வளர்ச்சியடைந்ததையும், முருகன், விநாயகர், சூரியன், சந்திரன் ஆகிய தெய்வ வழிபாடுகளும் சமூகத்தில் முக்கிய இடம் பெற்றிருந்ததையும் இந்நாணயங்கள் உறுதிப்படுத்துகின்றன. அதேவேளை சமணம் மற்றும் பௌத்தமும் அக்காலத்தில் தங்களது செல்வாக்கைத் தொடர்ந்து கொண்டிருந்தன என்பதும் அறியமுடிகின்றது. பல்லவர்களின் நாணயங்கள் வெறும் பரிமாற்றச் சாதனங்களாக மட்டுமல்லாது, சமயக் கொள்கைகள், பக்தி இயக்க வளர்ச்சி, கோயில் கட்டிடக்கலை, கலைநயம் மற்றும் மன்னர்களின் விருதுப்பெயர்களை வெளிப்படுத்தும் ஊடகங்களாகவும் விளங்கியுள்ளன. கல்வெட்டுகள், சிற்பங்கள், பக்தி

இலக்கியங்கள் மற்றும் வெளிநாடுகளில் கண்டுபிடிக்கப்பட்ட நாணயங்கள் ஆகியவற்றுடன் ஒப்பிட்டு நோக்குகையில், பல்லவர்களின் சமய மற்றும் கலாச்சார செல்வாக்கு தமிழகத்தைத் விடவும் இலங்கை மற்றும் தென்கிழக்காசிய நாடுகளுக்கும் பரவியிருந்தது என்பது தெளிவாகின்றது. எனவே பல்லவர்கால நாணயங்கள், அக்கால சமயநிலையையும் இந்து சமய மறுமலர்ச்சியையும் வெளிப்படுத்தும் முக்கிய தொல்லியல் மற்றும் வரலாற்று ஆதாரங்களாக அமைந்துள்ளன.

**உசாத்துணைகள்**


1. ஆறுமுக சீதாராமன். 1994. தமிழகத் தொல்லியல் சான்றுகள், தொகுதி–1, தஞ்சாவூர்.
2. ஆறுமுக சீதாராமன். 1995. “பல்லவர் காசுகளும் முத்திரைகளும்”, ஆவணம், 6.
3. ஆறுமுகசீதாராமன்,சங்கரன்ராமன்,2007,பல்லவர் காசுகள்,தனலட்சுமி
4. பதிப்பகம்,தஞ்சாவூர்.
5. கோவிந்தசாமி, மு. 1997. பல்லவர் வரலாறு, சிதம்பரம்.
6. இராசமாணிக்கப்பிள்ளை, மா. 1944. பல்லவர் வரலாறு, திருநெல்வேலி.
7. மங்கள முருகேசன், ந.க. 1985. பல்லவர் ஆட்சி முறை, சென்னை.
8. நாகசாமி, இரா. 1968. மாமல்லபுரம், சென்னை.
9. சுப்பிரமணியன், தி.ந. 1938. பண்டைய தமிழ் எழுத்துக்கள், மறு பதிப்பு 1997, சென்னை.
10. Chattopadhyaya, B. (1977). Coins and Currency Systems in South India. Delhi.
11. Desikachari, T. (1933). South Indian Coins. Reprint, 1984. Delhi.
12. Hultzsch, E. (1890). South Indian Inscriptions, Vol. 1. Reprint, 1991. New Delhi.
13. Krishnamurthy, R. (1989). “Pallava Coins with Lion Symbol.” Journal of the Numismatic Society of India, Vol. 51.
14. Krishnamurthy, R. (2004). The Pallava Coins. Chennai: Garnet Publications.
15. Mahadevan, Iravatham. (1971). “Pallavas and the ‘Jar’ Legends.” In Prof. K. A. Nilakanta Sastri Felicitation Volume. Madras.
16. Mahalingam, T. V. (1988). Inscriptions of the Pallavas. New Delhi.
17. Minakshi, C. (1938). Administration and Social Life under the Pallavas. Reprint, 1977.
18. Mitchiner, Michael. (1998). The Coinage and History of Southern India, Part II. London.
19. Nagaswamy, R. (1981). Tamil Coins: A Study. Madras


**எழுத்தாளர் பிரகடனம் - முரண்பாடுகள் அறிக்கை (Author Declaration - Conflict of Interest Statement)**

இவ்வாய்வுக் கட்டுரையின் உள்ளடக்கத்திலோ, தரவுப் பகுப்பாய்விலோ அல்லது அதன் முடிவுகளிலோ எந்தவிதமான நிதி சார்ந்த அல்லது தனிப்பட்ட முரண்பாடுகளும் (No Conflict of Interest) இல்லை என்று இதன் முதன்மை எழுத்தாளர் உறுதிபடப் பிரகடனம் செய்கிறார். இக்கட்டுரை முற்றிலும் கல்வி மற்றும் சமூக மேம்பாட்டு ஆராய்ச்சிக்காக மட்டுமே நடுநிலைமையோடு எழுதப்பட்டுள்ளது.